
நான்காம்
வகுப்பு
தமிழ் முதல் பருவம்
முளைப்பாரி
பாடல்

விவசாயிகள் பருவம் பார்த்து விவசாயம் செய்து

அறுவடை செய்யும் நேரத்தில் முதலில் அடுத்த

போகத்திற்கான தரமான விதைகளை தன்னுடைய

நிலத்திலேயே தேர்வு செய்ய காலம்காலமாக கடைபிடித்த

தொழில்நுட்பம் **முளைப்பாரி**.

# முளைப்பாரி



•ஒரு பானையில் மண் நிரப்பி அதில் தட்டாம் பயறு, பாசிப்பயறு முதலியவற்றின் விதைகளை நெருக்கமாகத் தூவி, அதை வெயில் அதிகம் படாத ஒரு இடத்தில் நாலைந்து நாட்களுக்கு வைத்துவிடுவார்கள்.

•தினமும் பானையில் இருக்கும் மண்ணிற்கு நீர் ஊற்றி வருவார்கள். எனவே, பயறுவகை விதைகள் நெருக்கமாக பானையில் முளைத்து, வளர்ந்து நிற்கும்.

•

இப்பானையை நோன்பிருந்து கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். இதையே 'முளைப்பாரி' என்கிறார்கள்.

•முளைப்பாரி இல்லாத மாரியம்மன் விழா இல்லை. முளைப்பாரி பல்லாயிரம் வருட விவசாய வாழ்க்கையின் தொடர்ச்சியான




முளைப்பாரி




# முளைப்பாரி எடுப்பது ஏன்

அம்மன் கோயில் திருவிழாக்களில் கன்னிப்பெண்கள் முளைப்பாரி எடுப்பர். இதற்காக பூந்தொட்டியில் நவதானியங்களை விதைப்பர். விரதம் இருந்து கும்மியடித்து பாடல்கள் பாடி தண்ணீர் விடுவர். முளைவிட்ட தானியங்கள் எவ்வளவு உயரத்துக்கு வளருகிறதோ, அதைப் பொறுத்து மணவாழ்வு அமையும். திருவிழாவன்று முளைப்பாரியை சுமந்தபடி ஊர்வலமாக வந்து நீர்நிலைகளில் கரைப்பர்.

## 4 முளைப்பாரி – பாடல்



தன்னா னன்னே னானே தன
தானே னன்னே னானே
ஒன்னாந்தான் நாளையிலே
ஒந்த செவ்வா கிழமையிலே
ஒசக்கொட்டான் இரண்டெடுத்து
ஓடும் பிள்ளை தொண்டவிட்டு – தன்னா
வாங்கியாந்த முத்துகளை
வாரியிலே ஊற வச்சி
கம்பந்தட்டை இரண்டெடுத்து
கணுக்கணுவா முறிச்சி வச்சி
சோளத்தட்டை இரண்டெடுத்து
கணை கணையா முறிச்சி வச்சி
மாட்டாந்தொழு தெறந்து
மாட்டெருவு அள்ளி வந்து – தன்னா


ஓசந்த
செவ்வா
வாங்கியாந்த
ஊறவச்சி
முறிச்சி
மொளபோட்ட
உயர்ந்த
செவ்வாய்

# ஓலைக்கொட்டான்



# சோளத்தட்டை



# மாட்டெரு



# ஆட்டெரு




சிறுபயறு
SWEET VERY
HEALTHY

# காரமணிப் பயிறு



# காப்பு கட்டுதல்



# தையலர் - பெண்கள்




நன்றி
Thank You!